கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

வழக்கு எண். OS. No. 157/2023 நாள்: 17.07.2026

வா.சா.3 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வா.சா – 3 அழகர் சாமி முன்னிலையானார். சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.3 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வரவில்லை. வாதியின் வழக்கறிஞர் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் நன்கு தெரியும். நான் 108 ஆம்புலன்ஸில் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். நான் அரசு ஊழியர் இல்லை. வாதி என்ன வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்றால் வாதி 2 ஆம் பிரதிவாதியிடம் இருந்து பணத்தை வசூல் செய்ய கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1 ஆம் பிரதிவாதியின் சங்கத்தில் நான் அடிப்படை உறுப்பினராக உள்ளேன். அதற்கான அடையாள அட்டையை நிருபண வாக்குமூலத்துடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1 ஆம் பிரதிவாதியின் சங்கத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் நபர்கள் 3 ல் 1 பங்கு உறுப்பினர்களாக இருக்கலாம் என்று சங்கத்தின் மாநில தலைவர் ராமச்சந்திரன் கூறினார்.

1 ஆம் பிரதிவாதியின் சங்கத்தில் 2018 ஆம் வருடத்திலிருந்து உறுப்பினராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் 1 ஆம் பிரதிவாதியின் சங்கம் 2018 ஆம் வருடத்தில் பதிவு செய்யும் போது என்னுடைய பெயர் அந்த சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் 2 ஆம் பிரதிவாதி என் பெயருக்கு தற்காலிகமாக அடையாள அட்டை வழங்கி இருந்தார். அதே போன்று என்னிடம் காட்டப்படும் 2020 ஆம் வருட அறிக்கையில் மாவட்ட பதிவாளரிடம் சமர்ப்பித்த 1 ஆம் பிரதிவாதியின் சங்கம்

குறித்த பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் படி என்னுடைய பெயர் இல்லை என்றால் 2020 ஆம் வருடத்தில் உள்ள அறிக்கையில் என்னை ஆத்தூர் வட்டார தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதாக தெரிவித்து அந்தநகலை என்னிடம் காட்டினார். மேலும் அந்த வருடத்திற்குரிய தற்காலிக அடையாள அட்டையை digital card ஆக போட்டு தருவதாகவும் நிரந்திர உறுப்பினராக தேர்வு செய்யப்படுவதாகவும் கூறி அடையாள அட்டையை வாங்கி சென்று விட்டார். நான் சங்கம் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு அதற்கான வருட சந்தாவை செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். அந்த சந்தா ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளளேனா என்றால் இல்லை. கைவசம் உள்ளது.

வாதிக்கும் எனக்கும் என்ன உறவு என்று நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஒரே சமுதாயம் என்று சொல்லியுள்ளேன். உறுப்பினராகவும் சங்கத்தில் ஒன்றாக பயணித்தாகவும் சொல்லியுள்ளேன். வாதி 1ஆம் பிரதிவாதியின் சங்கத்தில் அடிப்படை உறுப்பினர் கிடையாது என்றால் 2018 ஆம் வருட அறிக்கையில் இல்லை. 2020 ஆம் வருட அறிக்கையில் வாதியின் பெயர் இருப்பதாக 2 ஆம் பிரதிவாதி காட்டினார். வாதி உறுப்பினராக உள்ளரா என்ற விவரம் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வாதி உறுப்பினராக உள்ளார் என்பதற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாக்கல் செய்துள்ளார். 13.03.2020 ஆம் தேதி வேலை நாள் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் வேலையில் இருந்தேன் என்றால் இல்லை. அன்றைய தேதி எனக்கு விடுமுறை. பணத்தை வாங்க 2 ஆம் பிரதிவாதி என்னை எப்படி தொடர்பு கொண்டார் என்றால் போன் மூலமாக தொடர்பு கொண்டார். தவமணியை நான் எந்த இடத்தில் இருந்து அழைத்து மதுரைக்கு சென்றேன் என்றால் கொடை ரோட்டிலிருந்து நான் தவமணியை அழைத்து கொண்டு மதுரைக்கு சென்றேன்.

எந்த வாகனத்தில் மதுரைக்கு சென்றோம் என்றால் 2 ஆம் பிரதிவாதி ராமசந்திரன் கார் கொண்டு வந்தார். நான் எந்த இடத்திலிருந்து மதுரைக்கு சென்றேன் என்றால் கொடை ரோடு டோல் கேட்டின் இருந்து சென்றேன்.

வா.சா.ஆ. 1 கடன் ஒப்பந்ததில் உள்ள விவரங்களை தவமணி தான் எழுதினார் என்றால் கடன் ஒப்பந்தம் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. பணம்வாங்கும் போது ராமசந்திரம் கையொப்பம் செய்தார். அவர் முன்னிலையில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். நான் தாக்கல்செய்துள்ள நிருபண வாக்குமூலத்தின் 4 வது பாராவில் 2 ஆம் பிரதிவாதி கொண்டு வந்த கடன் ஒப்பந்த பத்திரத்தை தவமணியிடம் கொடுத்து நிரப்ப சொல்ல 2 ஆம் பிரதிவாதி கையொப்பம் இட்டு என்னையும் தவமணியையும் சாட்சி கையொப்பம் இட சொன்னார். நாங்கள் கையொப்பம் இட்ட உடன் அன்றைய தினமே மேற்படி கடன் ஒப்பந்த பத்திரத்தில் வாதியிடம் கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 1 கடன் ஒப்பந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் 2 ஆம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 1 கடன் ஒப்பந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் 2 ஆம் பிரதிவாதியின் கையொப்பம் என்பதை நிருபிக்க கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்ப தயாராக உள்ளேன். 1 ஆம் பிரதிவாதியின் சங்கத்திற்கும் 2 ஆம் பிரதிவாதிக்கும் என்னை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. நான் சங்கத்தில் அடிப்படை உறுப்பினர் கிடையாது என்றால் சரியல்ல. வாதி வழக்கு தாக்கல்செய்து முதல் விசாரணை முடித்து குறுக்கு விசாரணைக்காக 4 வாய்தாக்கள் பெறப்பட்டும் அவர் குறுக்கு விசாரணைக்கு ஆஜர் ஆகவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உண்மையிலேயே சங்கத்திற்கோ 2 ஆம் பிரதிவாதிக்கோ பணம் கொடுத்து இருந்தால் குறுகசு விசாரணைக்கு ஆஜர் ஆகி இருப்பார் என்றும் வா.சா.ஆ. 1 கடன் ஒப்பந்த ஆவணத்தை நானும் வாதியும் சாட்சி தவமணியும் சேர்ந்து 1 ஆம் பிரதிவாதியின் சங்கத்திற்கும் 2 ஆம் பிரதிவாதி பெயருக்கும் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

1,2 ஆம் பிரதிவாதிகளுக்கு நான் யார் என்று தெரியாது என்றும் 2 ஆம் பிரதிவாதிக்கு எதிராக போடப்பட்டுள்ள வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் 3 பேரும்

கூட்டாக சேர்ந்து 2 ஆம் பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மோடிசயாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.07.17 17:27:55 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.